**இன்றைய வேளாண் செய்திகள்**

**2.04.2013 A.M**

---

## பயறு சாகுபடியா? விதைப் பரிசோதனை அவசியம்

பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள், விதைகளை அவசியம் பரிசோதனை செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை மையம் அறிவிதித்துள்ளது.

இது குறித்து காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில், சித்திரை பட்டத்தில், கோடை பயிர்களாக, உளுந்து, பச்சை பயறு, காராமணி போன்றவற்றை சாகுபடி செய்வது வழக்கம். நீர் பற்றாக்குறை உள்ள கோடைக் காலத்தில், குறைவாக நீர் தேவைப்படும் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம், அதிக வருமானம் பெறலாம். பயறு வகைப் பயிர்களை பொறுத்தவரையில், பயன்படுத்தப்படும் விதைகளுக்கு, குறைந்தபட்சம், 75 சதவீதம் முளைப்புத் திறன் இருப்பது அவசியம். இவ்விதைகளை, பயன்படுத்தும்போது, உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயிர்களுக்கு 30க்கு10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்து பராமரிக்கப்படும். இதன் மூலம் ஹெக்டேருக்கு, 3.25 லட்சம் செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது எளிதாகும். இவ்வாறு பராமரிப்பதன் மூலம் சராசரி மகசூலை விட, 20 சதவீதம் அதிக மகசூல் பெறலாம்.

எனவே, விதைகளை விதைப்பதற்கு முன்பாக, விதைப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். கோடை பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களிடம் உள்ள அல்லது தாங்கள் விதைப்பதற்காக வாங்கியுள்ள விதையிலிருந்து, 100 கிராம் விதை எடுத்து, விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு, தங்களுடைய முழு முகவரி மற்றும் பரிசோதனைக் கட்டணமாக, ரூ. 30 நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைத்து, பரிசோதனை முடிவுகளை பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தாட்கோ மூலம் மானியக் கடன் பெற காலக்கெடு நீட்டிப்பு

தாட்கோ மூலம் ஆதிதிராவிட இனத்தவர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட மானியக் கடன் பெற விண்ணப்பிக்க வரும் ஏப்ரல் 8-ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

தாட்கோ மூலம் ஆதிதிராவிட இன மக்கள் பெட்ரோல், டீசல், எரிவாயு நிலையங்கள் அமைத்தல், மருத்துவமனை அமைத்தல், மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி உள்ளிட்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு தாட்கோ மூலம் மானியக் கடன் வழங்கப்பட உள்ளது. இக்கடன் பெற மார்ச் 30-ம் தேதிக்குள் இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இக்காலக்கெடுவை வரும் ஏப்ரல் 8-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார். எனவே தகுதியுடைய ஆதிதிராவிட இன மக்கள் வரும் ஏப்ரல் 8-ம் தேதிக்குள் ட்ற்ற்ல்:ஹல்ல்ப்ண்ஸ்ரீஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஸ்ரீர்.ஸ்ரீர்ம் என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். பதிவு செய்யும்போது ரேஷன் அட்டை எண், இருப்பிடச் சான்று, சாதிச்சான்று, வருமானசான்று உள்ளிட்டவைகளின் எண்களையும் பதிவு செய்ய வேண்டும்.

திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

## விவசாயிகள் சங்க மாநாட்டுப் பணிக்குழு அமைப்பு

விவசாயிகள் சங்க தேசிய மாநாட்டுக்கான பணிக்குழு புதுச்சேரியில் அமைக்கப்பட்டது.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது தேசிய மாநாடு வரும் ஜூலை 24 முதல் 27-ம் தேதி வரை கடலூரில் நடைபெறுகிறது.

இம்மாநாட்டுக்கான பணிக்குழு அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் புதுச்சேரியில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு விவசாயிகள் சங்கத்தின் பிரதேசத் தலைவர் எஸ்.பத்மநாபன் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவரும், சிதம்பரம் சட்டப்பேரவை உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன், புதுச்சேரி மின்துறை அமைச்சர் டி.தியாகராஜன், மார்க்சிஸ்ட் பிரதேசச் செயலர் வெ.பெருமாள், செயற்குழு உறுப்பினர் தா.முருகன், சங்கத்தின் தமிழ் மாநிலப் பொருளாளர் ஏ.நாகப்பன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், மாநாட்டுக்கான 101 பேர் கொண்ட பணிக்குழு அமைக்கப்பட்டது.

பணிக்குழுத் தலைவராக பி.தாண்டவசாமி, செயலராக எஸ்.பத்மநாபன், பொருளாளராக பி.சங்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தீர்மானங்கள்

புதுச்சேரியில் விளை நிலங்களைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும். காரைக்கால் மற்றும் புதுச்சேரியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

புதுச்சேரியில் நீர் ஆதாரத்தை பெருக்க, நீர் இயல் நிபுணர் குழுவை அமைக்க வேண்டும். உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தட்டுப்பாடின்றி மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

## பூண்டு சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கு

கொடைக்கானல் விவசாயிகளுக்கு மலைப்பிரதேசங்களுக்கேற்ற பூண்டு ரகங்கள், நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த முறையில் பூச்சிக் கட்டுப்பாடு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

கொடைக்கானல் மேல்மலைக் கிராமங்களில் அதிக அளவில் பூண்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந் நிலையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல் மற்றும் கோழிக்கோடு பாக்கு மற்றும் வாசனைப் பயிர்கள் மேம்பாட்டு இயக்கம் இணைந்து விவசாயிகளுக்கு சீரிய பூண்டு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் பூம்பாறையில் நடைபெற்றது.

இப் பயிற்சி முகாமிற்கு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் ஜே.ராஜாங்கம் தொடங்கி வைத்துப் பேசினார். கோவை தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சி.சுப்பிரமணியன் பூண்டின் விளைச்சலை அதிகரிக்க விவசாயிகள் செய்ய வேண்டிய யுக்திகள் குறித்து பேசினார்.

தோட்டக்கலை துணை இயக்குனர் எஸ்.ராஜா முகமது தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் மத்திய செம்மறி ஆடுகள் ஆராய்ச்சி நிலைய தலைமை ஆராய்ச்சியாளர் எ.எஸ்.ராஜேந்திரன், தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் மு.ஆனந்தன், பூம்பாறை ஊராட்சித் தலைவர் தனலட்சுமி சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர். உதவிப் பேராசிரியை செந்தமிழ்செல்வி நன்றி கூறினார்.

## அவரைக்காய் விலை உயர்வு:விவசாயிகள் மகிழ்ச்சி

ஆண்டிபட்டி பகுதியில் செடி அவரைக்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. மேலும் அவரைக்காய் விலை ஏற்றத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் புள்ளிமான் கோம்பை, தெற்கு மூனாண்டிபட்டி, நடுப்பட்டி மற்றும் அணைக்கரைப்பட்டி பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கு மேல் தக்காளி, வெண்டை மற்றும் செடி அவரை, பாகற்காய், கத்திரிக்காய் போன்ற காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் ஆண்டிக் என்ற வகையைச் சேர்ந்த செடி அவரைக்காய் அதிகளவு பயிரிடப்பட்டு வருகிறது.இவ்வகை அவரைக்காய் நட்ட 50-வது நாளில் இருந்து,மகசூல் கொடுக்க ஆரம்பிக்கிறது. இதில் வராத்திற்கு ஒரு முறை காய்களை பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 500 கிலோ மகசூல் கிடைக்கிறது. இதனை தரம் பிரித்து ஆண்டிபட்டி மொத்த வியாபாரிகளிடம் விற்கப்படுகிறது. இவ்வகை அவரைக்காய் திங்கட்கிழமை அன்று சந்தையில் விலை ரூ 30 என்ற அளவில் விற்கப்பட்டது. இது குறித்து காமராஜ் என்ற விவசாயி கூறுகையில், கடந்த மாதம் கிலோ 4முதல் 6 வரை விலை போனது. தற்போது நல்லவிலை கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.

## விசாயிகளுக்கு அன்னவாரி சான்றிதழ் வழங்கக் கோரிக்கை

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நகையீட்டின்பேரில் தாங்கள் வாங்கிய கடனை ஓராண்டுக்கு நீடிக்க தேவைப்படும் அன்னவாரி சான்றிதழை வழங்க வேண்டும் என ஆட்சியரிடம் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

இதுகுறித்து மங்கலம் கிராம நீரினைப் பயன்படுத்துவோர் சங்க முன்னாள் தலைவர் பொன்னுசாமி ஆட்சியரிடம் திங்கள்கிழமை அளித்த மனு:

திருப்பூர் மாவட்டத்தில் குறைவான அளவு மழை பெய்திருப்பதால், வாழை, மஞ்சள் போன்ற பயிர்கள் காய்ந்து, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சாகுபடிக்காக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நகையீட்டின்பேரில், வட்டியில்லா குறுகிய கால கடனை விவசாயிகள் பெற்றிருந்தனர்.

தற்போது ஓராண்டு காலம் முடிந்த நிலையில், கடனை திருப்பி செலுத்துமாறும், இல்லையெனில், கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும் என தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் தெரிவித்துள்ளன.

திருப்பூர் மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக முதல்வர் அறிவித்துள்ள நிலையில், விவசாயிகள் வாங்கிய கடனை நீண்ட கால கடனாக மாற்ற வருவாய் துறையின் அன்னவாரி சான்றிதழ் வழங்க ஆட்சியர் உத்தரவிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ.7 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.7 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம் போனது.

விலை விவரம்: கதளி கிலோ ரூ.16, நேந்திரன் கிலோ ரூ.27, செவ்வாழை 1 தார் ரூ.430, பூவன் 1 தார் ரூ.300, ரொபஸ்ட்டோ 1 தார் ரூ.260, ரஸ்தாளி 1 தார் ரூ.325, மொந்தன் 1 தார் ரூ.250, பச்சைநாடன் 1 தார் ரூ.180, தேன் வாழை 1 தார் ரூ.430.

11 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.7 லட்சத்துக்கு விற்பனையானது. கோபி, ஈரோடு, பெருந்துறை, அந்தியூர், அம்மாப்பேட்டை, குன்னத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த விவசாயிகள் ஏலத்தில் கலந்துகொண்டனர்.

தேங்காய் ஏலம்:

விலை விவரம்: தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ.7.40 பைசாவுக்கும், குறைந்தபட்சமாக ரூ.4.25 பைசாவுக்கும் விலை போனது. 8 ஆயிரம் தேங்காய்கள் ரூ.40 ஆயிரத்துக்கு விற்பனையானது. கோபி மற்றும் சுற்றுப் பகுதிகளிலிருந்து விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

### ஆடுகளுக்குத் தடுப்பூசி அவசியம்'

ஆடுகளுக்குத் தடுப்பூசி போடுவது மிகவும் அவசியம் என்றார் சின்னதாராபுரம் கால்நடை உதவி மருத்துவர் மோகன்ராஜ்.

தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், சின்னதாராபுரத்தை அடுத்த கூடலூர் கிழக்கு ஊராட்சிக்கு வழங்கப்பட்ட ஆடுகளுக்கு இலவச ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி முகாம் அண்மையில் நடைபெற்றது.

க. பரமத்தி ஒன்றியம், சின்னதாராபுரம் கால்நடை மருந்தகத்தில் நடந்த முகாமுக்கு, கூடலூர் கிழக்கு ஊராட்சித் தலைவர் புஷ்பவதி தலைமை வகித்தார் ஒன்றியக் குழு உறுப்பினர் செந்தில் குடற்புழு நீக்க முகாமைத் தொடக்கி வைத்தார்.

முகாமில் உதவி மருத்துவர் மோகன்ராஜ் மேலும் பேசியது:

கொடிய நோயான ஆட்டுக் கொல்லிநோய் தடுப்பூசி மூலமே தவிர்க்கப்படுகிறது. ஆடு வளர்ப்போரின் பொருளாதார இழப்பு தடுக்கப்படுகிறது.

இந்நோய் கண்ட ஆடுகளுக்கு சளி, இருமல், பசியின்மை மற்றும் கழிச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டு, நாளடைவில் அவற்றின் உற்பத்தித் திறன் வெகுவாக குறைந்துவிடும். எனவே, தடுப்பூசிகளை மறவாமல் ஆடுகளுக்கு போடுவது அவசியம்.

மேலும், வெப்ெளாடுகளை எளிதில் டெட்டனஸ் என்னும் ரண ஜன்னி தாக்க வாய்ப்புள்ளதால் காயம் ஏற்படும் போதும், குட்டியீனும் முன்பும் டெட்டனஸ் தடுப்பூசியை அவசியம் போட அளிக்க வேண்டும். 3 முதல் 4 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்வதும், மழைக் காலங்களில் இளம்புற்களை மேய விடுவதற்கு முன் துள்ளுமாரி நோய்த் தடுப்பூசியை 6 மாதங்களுக்கு ஒரு முறை அளிப்பதும் அவசியம் என்றார்.

முகாமில் மோகன்ராஜ், எலவனூர் கால்நடை ஆய்வாளர் மணி, முடிகணம் கால்நடை ஆய்வாளர் சக்திவேல், ஆகியோர் கொண்ட குழுவினர் 550 ஆடுகளுக்கு ஆட்டுக் கொல்லிநோய் தடுப்பூசியை அளித்தனர். மருத்துவ உதவியாளர் மரிய உபகாரம் நன்றி கூறினார்.

## பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வலியுறுத்தல்கரூர்

பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ. 30, எருமைப்பாலுக்கு லிட்டருக்கு ரூ. 40 என பால் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்தி வழங்க தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க தாந்தோணி ஒன்றியப் பேரவைக் கூட்டம் வெப்ெளியணையில் திங்கள்கிழமை நடைபெற்றது. சங்கத்தின் தாந்தோணி ஒன்றிய அமைப்பாளர் சி. வையாபுரி தலைமை வகித்தார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எ.எம். முனுசாமி, சிஐடியு சங்க கெப்ரவத் தலைவர் ஜி. ரத்தினவேலு, மாநிலப் பொருளாளர் மா. சங்கர், கரூர் மாவட்டச் செயலர் எஸ். சண்முகசுந்தரம் ஆகியோர் சிறப்பித்துப் பேசினர்.

கூட்டத்தில் பால் கொள்முதலில் லிட்டருக்கு பசும்பாலுக்கு ரூ. 30, எருமைப்பாலுக்கு ரூ. 40 என உயர்த்தி தமிழக அரசு வழங்க வேண்டும், மாட்டுத் தீவனத்தின் 50 சதத்தை மானியமாக அரசே வழங்க வேண்டும்.

பால் உற்பத்தியாளார்களுக்குரிய வறட்சி நிவாரணத்தை உடனடியாக வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளார்கள் கூட்டுறவு சங்கத் தேர்தலை நியாயமாக நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 27.24 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 27.24 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## தண்ணீர் இன்றி காய்ந்தது 750 ஏக்கர் நெல் பயிர்: நிவாரணம் கோரி விவசாயிகள் மனு



மதுராந்தகம் அருகே 750 ஏக்கர் நிலத்தில் விளைவிக்க வைக்கப்பட்டிருந்த நெல் பயிர் தண்ணீரின்றி காய்ந்து விட்டதாகவும், உரிய நிவாரணம் வழங்கக் கோரியும் அப்பகுதி விவசாயிகள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனனிடம் மனு அளித்தனர்.

தமிழகத்தில் சென்னையை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்திருந்தது. இந்த நிலையில் வறட்சியால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பயிர்கள் பாதிக்கப்படவில்லை என்று மாவட்ட நிர்வாகம் தமிழக அரசுக்கு அண்மையில் அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்து. இந்த நிலையில் திங்கள்கிழமை நடந்த மக்கள் குறைதீர்க் கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் கீழாமூர் ஊராட்சி மன்றத் தலைவர் லதா விஜயகுமார், கிராம ஏரி நீர்ப்பாசன சங்கத் தலைவர் வி. துலுக்காணம் மற்றும் கிராமப் பொது மக்கள் சார்பில் தனித்தனியாக வழங்கப்பட்ட மனு விவரம்:

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்டது கீழாமூர் ஊராட்சி. இங்கு சுமார் 287 குடும்பங்களைச் சேர்ந்த 2,200-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் முழுக்க, முழுக்க ஏரி நீர்ப்பாசனத்தை நம்பி விவசாயத்தையும், விவசாயம் சார்ந்த கூலி வேலையையும் செய்துவருகின்றனர்.

அண்மையில் சில மாதங்களுக்கு முன்பு மழையின்போது இப்பகுதியில் உள்ள பொதுப்பணித்துறைக்குள்பட்ட பெரிய ஏரி உடைந்து மழைநீர் வீணாகியது. இந்த ஏரியின் மூலம்தான் இப்பகுதியில் விவசாயம் நடைபெற்று வருகிறது. கிணற்று நீர் பாசனவசதியும் இல்லை. இதனால் இக்கிராமத்தில் சுமார் 750 ஏக்கர் பரப்பளவில் விளைவிக்கப்பட்டிருந்த நெல் பயிர் போதிய தண்ணீர் இல்லாமல் கருகிவிட்டன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிராமத்தில் உள்ள விளைநிலங்களைப் பார்வையிட்டு விவசாயிகளுகளுக்கு 1 ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வீதம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும். பெரிய ஏரி மதகை சீரமைத்து கிராம விவசாயிகளையும், மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

வேளாண் துறை அதிகாரிகளுக்கு உத்தரவு: ஆட்சியர் லி. சித்ரசேனனிடம் கேட்டபோது அவர் கூறியது: மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறுகிறது. அப்போது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை விவசாயிகள் எடுத்து வைக்கவில்லை. மேலும் அந்தந்த பகுதிகளுக்கே சென்று குறைதீர்க் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது, அப்போதும் விவசாயிகள் இதுகுறித்து எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை. இப்போதுதான் விவசாயிகள் வெளியே வருகின்றனர்.

வேளாண்துறை அதிகாரிகளை கீழாமூர் கிராமத்தில் ஆய்வு நடத்த உத்தரவிட்டுள்ளேன். அந்த ஆய்வின்போது உண்மை தன்மையை அறியும் வகையில் தண்ணீர் இன்றி காய்ந்ததாகக் கூறப்படும் பயிர்களை விடியோவில் பதிவு செய்ய உத்தரவிட்டுள்ளேன். அதிகாரிகள் தரும் அறிக்கைக்கு பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர் லி. சித்ரசேனன்.

### ரேஷன் கடைகளில் 2014 மார்ச் வரை மலிவு விலையில் துவரம், உளுத்தம் பருப்பு

உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை மலிவு விலையில் வழங்கும் சிறப்பு பொது விநியோகத் திட்டம் அடுத்த ஆண்டு (2014) மார்ச் இறுதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை ரேஷன் கடைகளின் மூலம் குறைந்த விலையில் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது.

கடந்த அக்டோபர் 1 ஆம் தேதி முதல் இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவு காலாவதியானதைத் தொடர்ந்து புதிய உத்தரவை அரசு வெளியிட்டுள்ளது.

இந்த உத்தரவுப்படி ஏப்ரல் 1 ஆம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் எம்.பி.நிர்மலா பிறப்பித்துள்ளார்.

எவ்வளவு நிதி ஒதுக்கீடு: துவரம் பருப்பை கொள்முதல் செய்ய ரூ. 314 கோடியும், உளுத்தம் பருப்பை கொள்முதல் செய்ய ரூ.251.81 கோடியும், பாமாயில் கொள்முதலுக்காக ரூ.449.20 கோடியையும் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் செலவிடுகிறது.  நடப்பு நிதியாண்டில் உணவுத் துறைக்காக ரூ.4,900 கோடியை மானியமாக அரசு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சேமிப்புக் கிடங்கு  பற்றாக்குறை: கோதுமையை கூடுதலாக ஏற்றுமதி செய்ய மத்திய அரசு திட்டம்

கோதுமை கொள்முதல் துவங்க உள்ள நிலையில், சேமிப்புக் கிடங்கு பற்றாக்குறையை சமாளிக்க கையிருப்பில் உள்ள கோதுமையை கூடுதலாக ஏற்றுமதி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத் பவார் திங்கள்கிழமை கூறியதாவது: இந்திய உணவுக் கழகம் (எஃப்.சி.ஐ.) சார்பில் கடந்த பருவத்தில் 3.8 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டது. இதில் 90 லட்சம் டன் கோதுமை கையிருப்பில் உள்ளன. இந்நிலையில், ஏப்ரல் 14ஆம் தேதி முதல் கோதுமை அறுவடை முழு வீச்சில் தொடங்க உள்ளது. இந்த பருவத்தில் 4.5 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் மொத்த கோதுமை கையிருப்பு 5.4 கோடி டன்னாகும். இவை முழுவதையும் சேமிப்பதற்கான வசதி இல்லாத காரணத்தால், ஏற்கெனவே கையிருப்பில் உள்ள கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்படும்.

2012-13 நிதியாண்டில் 95 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. இதில் 50 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய தனியார் நிறுவனங்களுக்கு கடந்த மாதம் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அவை இன்னமும் முழுமையாக ஏற்றுமதி செய்யப்படவில்லை.

எனவே, ஏற்றுமதிக்கான பணிகளை துரிதப்படுத்த வேண்டும். அப்போதுதான், கையிருப்பில் உள்ள கோதுமை குறைந்து புதிதாக கொள்முதல் செய்யப்படும் கோதுமையை சேமிப்பதற்கு இடம் கிடைக்கும் என்றார்.

மார்ச் 1ஆம் தேதி நிலவரப்படி, இந்திய உணவுக் கழகத்தின் உணவு தானிய கையிருப்பு 6.28 கோடி டன்னாக இருந்தது. கழகத்தின் மொத்த தானிய சேமிப்புத் திறன் 7.4 கோடி டன் ஆகும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**2.04.2013 A.M**

---

## ஸ்ரீவைகுண்டம் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர்; நெல்லை பொதுப்பணித்துறை அலுவலகம் முற்றுகை

திருநெல்வேலி: ஸ்ரீவைகுண்டம் வடகால் , தென்கால் பகுதிக்கு முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி நெல்லை பொதுப்பணித்துறை அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு மனு அளித்தனர்.

ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் பகுதிகளில் 8 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக பாசன சாகுபடி நிலம் உள்ளது. ஆண்டுதோறும் முன் கார் பருவ சாகுபடிக்காக ஏப்.1ம் தேதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். இதற்கு அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு முன் கார் பருவ சாகுபடிக்காக அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதையடுத்து நெல்லை பொதுப்பணித்துறை அலுவலகத்தை ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் விவசாயிகள் 200க்கும் மேற்பட்டவர்கள் முற்றுகையிட்டனர். முன் கார் பருவ சாகுபடிக்கு அணையில் இருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி தாமிரபரணி திட்டக்குழு சேர்மன் உதயசூரியன் தலைமையில் செயற்பொறியாளர் முத்துப்பாண்டியிடம் விவசாயிகள் மனு அளித்தனர்.

இதுகுறித்து தாமிரபரணி திட்டக்குழு சேர்மன் உதயசூரியன் கூறுகையில், " கடந்த ஆண்டு முன் கார் பருவ சாகுபடிக்காக ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் பகுதிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த ஆண்டு பாபநாசம் அணையில் 78 அடியும், மணிமுத்தாறில் 90 அடியும், சேர்வலாற்றில் 80 அடியும் தண்ணீர் உள்ளது. இருப்பினும் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. தண்ணீரை திறந்துவிட வலியுறுத்தி பொதுப்பணித்துறை அலுவலகத்தில் மனு அளித்துள்ளோம். தண்ணீர் திறந்துவிட்டால் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார்'.

செயற்பொறியாளர் முத்துப்பாண்டி கூறுகையில், "பாபநாசம் அணையில் 78 அடி மட்டே தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டு தண்ணீர் திறந்துவிடப்பட்டு, கடைசி நேரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு

ஏற்பட்டது. முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்தால் குடிநீர் பிரச்னையை சமாளிக்க முடியுமா என்பது ஆலோசித்து தான் முடிவெடுக்க முடியும். விவசாயிகளின் கோரிக்கையை பொதுப்பணித்துறை தலைமை பொறியாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். தூத்துக்குடி மாவட்ட கலெக்டருக்கும் விவசாயிகளின் கோரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அரசிடம் இருந்து அறிவிப்பு வந்த பிறகே தண்ணீர் திறப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்றார்'

## பிஞ்சில் உதிரும் மாங்காய் வாட்டு வெயிலால் விவசாயிகள் கலக்கம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் வெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில், மாங்கூழ் தயாரிக்க பயன்படும் பெங்களூரா ரக மாங்காய் பிஞ்சில் உதிர்ந்து வருவதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.முக்கனிகளில் முதன்மையானது மா. உலகளவில், 63 நாடுகளில் மா பயிரிட்படுகிறது. உலக மாம்பழ உற்பத்தியில், 19 மில்லியன் டன் மாம்பழங்கள் (53 சதவீதம்) இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களின் கல்பத்தரு என அழைக்கப்படும் மா தமிழகத்தில், ஒரு லட்சத்து, 14 ஆயிரத்து 926 ஷெக்டேருக்கு மேல் பயிர் செய்யப்படுகிறது.தமிழகத்தில் மா உற்பத்தியில், ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்டம் முதன்மை பெறுகிறது. குறிப்பாக மாங்கூழ் தயாரிக்க பயன்படும் தோத்தாபுரி (பெங்களூரா), அல்போன்ஸா, ராஸ்புரி உள்ளிட்ட ரகங்கள் அதிக அளவில் இங்கு சாகுபடி செய்யப்படுகிறது.மாங்கூழ் தயாரிப்பை பொறுத்த வரையில் மா சீசன் காலங்களில் மட்டுமே இப்பணிகள் நடக்கும். அதாவது மாம்பழ சீசன் காலங்களில், 75 நாட்கள் முதல் 90 நாட்கள் வரையில் மாங்கூழ் தயாரிப்பு பணிகள் சுறுசுறுப்பாக நடக்கும்.தமிழகம் முழுவதும் உற்பத்தியாகும் மாவில், 40 சதவீதம் மாங்கூழ் தயார் செய்ய பயன்படுத்தப்படுகிறது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், 40க்கும் மேற்பட்ட மாங்கூழ் தொழிற்சாலைகளில் மாங்கூழ் தயார் செய்யப்பட்டு, சவூதி அரேபியா, துபாய், ஏமன், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் கிழக்கு ஐரோப்பியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.இந்திய அளவில் தமிழகத்தில் இருந்து, 25 சதவீதம் மாங்கூழ் தமிழகத்தில் தயார் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது, மா சீசன் துவங்கிய நிலையில், முன் பருவ ரகங்களான செந்தூரம், பீத்தர் ஆகிய ரகங்கள் விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது.குறிப்பாக கடந்த மாத இறுதியில் இருந்து சந்தைகளில் செந்தூரம் மா விற்பனைக்கு கிடைக்கிறது. தற்போது, ஒரு கிலோ, 60 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.மத்திய ரகங்களான மாங்கூழ் தயாரிப்புக்கு பயன்படும் பெங்களூரா, அல்போன்ஸா உள்ளிட்ட ரகங்கள் தற்போது, பிஞ்சு

விட்டு, காய்கள் பெருக்கம் அடையும் நிலையில் உள்ளது. முன் பருவ ரகங்களுக்கு ஏற்ப தட்ப வெப்ப சூழ்நிலைகள் நிலவிய நிலையில், முன் பருவ ரகங்கள் சீரான முறையில் உற்பத்தி கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.அதே நேரம் மத்திய பருவ ரக மாங்காய்கள் செடிகளில் பெருக்கம் அடைந்து வரும் நிலையில், எந்தாண்டும் இல்லாத அளவுக்கு வெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில், காய்களுக்கு ஏற்ற சீதோஷண நிலை மாறுப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த, 15 நாட்களாக வெயில், 100 டிகிரிக்கு மேல் வாட்டுவதால், பெங்களூரா உள்ளிட்ட மா ரகங்கள் வெதும்பி, பிஞ்சில் உதிரத்துவங்கி வருகிறது. பிஞ்சில் உதிரும் பெங்களூரா ரக மாங்காய்கள் ஊறுகாய் தயாரிப்புக்காக சந்தைகளில் விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது.அதே போல் சற்று பருமன் அடைந்த பெங்களூரா காய்களையும் விவசாயிகள் அறுவடை செய்து சந்தை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்தாண்டு பெங்களூரா ரகம் கிலோ, 15 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்காத நிலையில், தற்போது, 20 முதல் 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.வாட்டும் வெயில் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கு பெங்களூராவில் உற்பத்தி கிடைக்காது என்பதால், தற்போதே விவசாயிகள் காய்களை முன் கூட்டி அறுவடை செய்ய துவங்கியுள்ளனர்.தற்போது அறுவடை செய்யப்படும் காய்கள் மூலம் மாங்கூழ் தயார் செய்ய முடியாது என்பதால், சில்லறை விற்பனையை குறி வைத்து விவசாயிகள் சந்தைகளில் இந்த ரக மாங்காய்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.தொடர்ந்து வெயில் நீடிக்கும் நிலையில், இந்தாண்டு எதிர்பார்த்த அளவுக்கு மாங்கூழ் தொழிற்சாலைகளுக்கு தேவையான மாங்காய் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படும் நிலையுள்ளது.வரும் நாட்களில் கோடை மழை பெய்தால், பெங்களூரா ரகம் உள்ளிட்ட மத்திய பருவ மற்றும் பின் பருவ ரக மாங்காய் உற்பத்தியில், விவசாயிகள் எதிர்பார்த்த உற்பத்தியை எட்ட வாய்ப்புள்ளது.

## 1,218 பருத்தி மூட்டைகள் ரூ.23 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில், 1,218 பருத்தி மூட்டைகள், 23 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில், கவுண்டம்பாளையம் குடோனில் வாரம் தோறும் திங்கள் கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில், நாமக்கல், சேலம், கொங்கணாபுரம், திருச்செங்கோடு, அவிநாசி, அன்னூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், ஆத்தூர், தொடாவூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர்.பட்டணம்,

முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம், பெரம்பலூர், ஏர்வாடி, புளியங்குறிச்சி, துறையூர், மணிவிழுந்தான்காலனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் அதிகமான விவசாயிகள் அறுவடை செய்த பருத்தி மூட்டைகளை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதில், ஆர்.சி.ஹெச்., பருத்தி மூட்டைகள் 545, டி.சி.ஹெச்., 673 என, மொத்தம், 1,218 மூட்டைகள் ஏலத்தில் குவிக்கப்பட்டது. டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம், 5,489, குறைந்தபட்சம், 4,265 ரூபாய்க்கும், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம், 4,952, குறைந்தபட்சம், 4,439 ரூபாய்க்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகள், 23 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## மழையால் பூக்கள் உதிர்வு: மாங்காய் விளைச்சல் பாதிப்பு

மரிக்குப்பம்:கோடை வெயிலில் பயிர்கள் காய்ந்து வரும் நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் பெய்த ஒருநாள் மழைக்கே, மா மரங்களில் இருந்த பூக்கள் உதிர்ந்து விட்டன. இதனால், மாங்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை, திருத்தணி, பள்ளிப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில், நெல், கரும்புக்கு அடுத்தபடியாக மா மரங்கள்

அதிகளவில் உள்ளன.

குத்தகைக்கு...

நிலத்தில் முதலீடு செய்வது பாதுகாப்பு மிக்கது எனபதால், சில ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் வியாபாரம் பரபரப்பாக நடந்து வருகிறது.

அவ்வாறு நிலத்தை வாங்கியவர்கள் சிலர், உடனடியாக பிளாட் போட்டு விற்காமல், அதில் மா மரங்களை வளர்த்து வருகின்றனர். நிலத்தின் உரிமையாளர்கள் நகரங்களில் இருந்தாலும், மாந்தோப்புகளை கவனித்துக் கொள்ள உள்ளூர் ஆட்களை

நியமித்து உள்ளனர்.

இதனால், இப்பகுதியில் மாந்தோப்புகள் அதிகம் உள்ளன. இவை ஆண்டுதோறும் குத்தகைக்கு விடப்படுகின்றன.

கடந்த பிப்ரவரி மாதம் ஆர்.கே.பேட்டை பகுதியில் பலத்த மழை பெய்தது. பருவம் கடந்த நிலையில் பெய்த இந்த ஒருநாள் மழையால், மா

மரங்களில் இருந்த பூக்கள் உதிர்ந்து விட்டன.

மழைநீர் படாமல், உட்புறமாக இருந்த பூக்கள் மட்டுமே தப்பியுள்ளன.

இவை தற்போது பிஞ்சுகளாக காய்த்துள்ளன. ஏப்ரல் மாதத்தில், மா மரங்கள் பூவும், பிஞ்சுமாக காட்சியளிக்கும். ஆனால், ஆர்.கே. பேட்டை பகுதியில், மா மரங்கள் பூக்கள் இன்றி, வெறும் இலைகளுடன் பளிச்சென காணப்படுகின்றன.

மழையால் பூக்கள் உதிர்ந்தபின், காம்புகள் காய்ந்துவிடும். அடுத்த ஓரிரு நாட்களில் காம்புகளும் உதிர்ந்துவிடும். இதனால், மா மரங்கள் பூக்கள்

இருந்த சுவடே தெரியாமல் உள்ளன.பாதிப்புஇது குறித்து, மரிக்குப்பம் விவசாயி சீனு கூறுகையில், "நான் நான்கு ஏக்கரில் மா, பயிர் செய்துள்ளேன். மழையால் பூக்கள் உதிர்ந்து விட்டன. மூன்றில் ஒரு பங்கு விளைச்சல் கூட கிடைக்காது. உள்ளூர் வரத்து முற்றிலும் பாதிக்கப்படும் சூழ்நிலையில், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட அண்டை மாநில மாங்கனிகளை மட்டும் நம்பியே மார்க்கெட் உள்ளது' என்றார்.

### காய்கறி தோட்டம் அமைக்க பயிற்சி

மதுராந்தகம்:வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி முகாம், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் நடந்தது.

அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில், சுற்றுச்‹ழலை மேம்படுத்தவும், குடியிருப்பு பகுதியை பசுமையாக வைத்திருக்கும் நோக்கிலும், வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த, பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில், சமூக கல்வி நிறுவனம் சார்பில், வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பதற்கான அவசியம், சாகுபடி முறைகள், பராமரிப்பு மற்றும் நன்மைகள் குறித்து, பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில், பேரூராட்சி தலைவர் தாவுத்பி மற்றும் செயல் அலுவலர் கேசவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கீழாமூர் ஊராட்சியில் கருகும் நெற்பயிர்கள் நிவாரணம் கோரி விவசாயிகள் மனு

மதுராந்தகம்:கீழாமூர் ஊராட்சியில், 600 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள், நீரின்றி கருகி உள்ளதால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் கோரி, மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளனர்.

அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திக்கு உட்பட்டுள்ளது, கீழாமூர் ஊராட்சி. இவ்வூராட்சியில், 287 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில், விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதி விவசாயிகள், அங்குள்ள ஏரி நீரை பயன்படுத்தி, 600 ஏக்கர் பரப்பளவில், விவசாயம் செய்து வருகின்றனர்.

வீணான தண்ணீர்

கடந்த ஆண்டு, பருவ மழையின் போது, ஏரிக்கரை மற்றும் மதகு சேதமடைந்தது. ஏரியிலிருந்த தண்ணீர் வெளியேறாத வகையில், கிராம மக்கள், மண் மூட்டைகளை அடுக்கி பாதுகாத்தனர். அதன்பின், அங்கு வந்த பொதுப்பணி துறையினர், உடைந்து போன மதகு மற்றும் ஏரிக்கரையை பெயரளவிற்கு சீரமைத்தனர். ஆனாலும், தண்ணீர் தொடர்ந்து வெளியேறியது.

இதனால், விவசாயத்திற்கு தேவையான நீர் இன்றி, தற்போது, பயிரிட்டுள்ள நெற்பயிர்கள் அனைத்தும் கருகி விட்டன. இதுகுறித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள், மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

மனுவில் கூறியிருப்பதாவது:

கீழாமூரில், மொத்தம், 600 ஏக்கர் பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இதில், பாதி நிலத்தில், சிலர் சொந்தமாகவும், மீதமுள்ள நிலத்தில், ஏராளமான விவசாயிகள், குத்தகைக்கும் பயிர் சாகுபடி செய்துள்ளனர். ஒவ்வொரு விவசாயியும், ஏக்கருக்கு 25 முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை, கடன் வாங்கி நெல்

பயிரிட்டுள்ளனர்.கருகிய பயிர்கள்தற்போது, தண்ணீரின்றி பயிர்கள் கருகி உள்ளதால், கடனை அடைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க, மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏரி மதகை தண்ணீர் வெளியறாதபடி சீரமைக்க வேண்டும்

இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிளகாய் வற்றலை விற்று அதிக லாபம்: வேளாண் பல்கலை அதிகாரி தகவல்

கரூர்: "மிளகாய் வற்றலை உடனடியாக விற்றால், அதிக லாபம் பெறலாம்' என, தமிழ்நாடு வேளாண் பல்கலை சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:இந்தியா 40 சதவீத அளவுக்கு மிளகாய் உற்பத்தியிலும், பயன்பாட்டிலும் உள்ளது. இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் மிளகாய் வகைகளில் காடி, சன்னம் போன்ற ரகங்கள், வர்ணங் களுக்காகவும், பறவை கண்ண மிளகாய் காரத்துக்காகவும் பயன் படுத்தப்படுகிறது. 2012-13 ம் ஆண்டு இந்தியாவின் மிளகாய் ஏற்றுமதி இலக்கு 2.40 லட்சம் டன்னாக நிர்ணயம் செய்யப்பட்டு ள்ளது. மிளகாய் தூள், காய்ந்த மிளகாய், மிளகாய் உறுகாய், சீவல் மிளகாய் போன்றவை பல வடிவங்களில் இலங்கை, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.தமிழகத்தில் ராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் சங்கரன் கோவில் ஆகிய பகுதிகளில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு தமிழகத்தில் 30 ஆயிரத்து 298 டன் மிளகாய் வற்றல் 58 ஆயிரத்து

603 ஹெக்டேர் பரப்பளவில் உற்பத்தி செய்யப்பட்டது. வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.உற்பத்தியாகும் வற்றல் மிளகாய் கோவில்பட்டி, சாத் தூர், சங்கரன்கோவில், ராஜபாளையம் மற்றும் விருதுநகர் சந்தை களுக்கு மார்ச் மாதம் துவக்கத்தில் இருந்து வர துவங்கியுள்ளது. கடந்தாண்டு ஒரு கிலோ வற்றல் மிளகாய்க்கு 40 ரூபாய் முதல் 45 ரூபாய் வரை விலை கிடைத்தது. கடந்தாண்டை விட, தற்போது மிளகாய் விலை உயர்ந்துள்ளது.மேலும், மிளகாய் விலை உயருமான என, உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு செய்தது. அதில், வரும் ஏப்ரல், மே மாதங்களில் ஒரு கிலோ வற்றல் மிளகாயின் விலை 62 ரூபாய் முதல் 65 ரூபாய் வரை இருக்கும் என தெரிகிறது. ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கும் பட்சத்தில், வற்றல் மிளகாய்க்கு விலை ஏற வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் விற்றல் மிளகாயை விற்பனை செய்யலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தெளிப்புநீர் பாசன கருவிகள் வழங்கல்

கோத்தகிரி : கோத்தகிரியில் தோட்டக்கலை சார்பில், விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கும் விழா நடந்தது. நீலகிரிமாவட்ட தோட்டக்கலை துறை, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம், நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. கோத்தகிரி உபகோட்டத்தில் நடப்பு நிதியாண்டில், 100 எக்டர் பரப்பளவில் வழங்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, நான்காவது கட்டமாக, கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கும் விழா நடந்தது.

ஊராட்சி ஒன்றிய தலைவர் (பொறுப்பு) மணிமனோகரன் தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன், கீழ்கோத்தகிரி பகுதி விவசாயிகள் சங்க தலைவர் ரங்கசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், 8 விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில், தெளிப்புநீர் பாசன கருவிகள் வழங்கப்பட்டன.

### மாங்காய்க்கு குறைவான விலை பாதிப்பில் ஸ்ரீவி.,விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் மா மரங்களில் காய்கள் விளைந்து விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளன.

ஸ்ரீவில்லிபுத்தூர்,ராஜபாளையம், வத்திராயிருப்பு பகுதியில் ஆயிரகணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் மா மரங்கள் நடவு செய்து விவசாயம் செய்து வருகின்றனர். இங்கு சப்பட்டை, பஞ்சவர்ணம் போன்ற மா மரங்கள் உள்ளது. இங்கிருந்து விளையும் காய்கள், மதுரை, கொல்லம், திருவனந்தபுரம் உட்பட பல இடங்களுக்கு செல்லப்படுகிறது.

இந்நிலையில் கடந்தாண்டு சரி வர மழை பெய்யாததால், மா மரங்களில் பூ பூப்பதில் தாமதம் ஏற்பட்டது. கடந்த கார்த்திகையில்பெய்த மழையில் பூத்த, மா மரங்களில் தற்போது காய்கள் விளைந்து விற்பனைக்கு வந்துள்ளன. காய்களுக்கு பொதுவாக அதிக விலை கிடைக்கும். ஆனால் இந்தாண்டு வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்குவதால், விவசாயிகள் பாதிக்கின்றனர்.

விவசாயி ஒருவர் கூறுகையில்,"" சப்பட்டை மாங்காய் மதுரையில் கிலோ 45 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். பஞ்சவர்ண மாங்காய் கிலோ 35 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

ராஜபாளையத்தில் கூட சப்பட்டை கிலோ 40 ரூபாயும், பஞ்சவர்ணம் 32 ரூபாய் கொள்முதல் செய்யப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு சில வியாபாரிகளே கொள்முதல் செய்கின்றனர். இவர்கள் , சப்பட்டை கிலோ 27 , பஞ்சவர்ணம் 22 ரூபாய் என குறைவான விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். நாங்களும் கடனுக்காக இவர்களிடம் கொடுத்து வருகிறோம். கேரள வியாபாரிகள் வந்தால் தான் விலை ஏறும். அது வரை நஷ்டத்தில் தான் கொடுக்க வேண்டியதுள்ளது, "என்றார்.

## மகாராஷ்டிரா பழம் வருகையால் திராட்சை விலையில் கடும் சரிவு

கம்பம்: மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து, திராட்சை வருவதால், தமிழக திராட்சைக்கு விலை கிடைக்கவில்லை.

இந்தியாவில் திராட்சை சாகுபடி மகாராஷ்டிரா, தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் மட்டும் அதிகம் நடக்கிறது. தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தில் ஆண்டுதோறும் திராட்சை சாகுபடி செய்யப்படு கிறது.

ஆண்டிற்கு 3 முறை அறுவடை நடக்கிறது.இங்குள்ள திராட்சைக்கு கட்டுபடியான விலை கிடைப்பதில்லை. சாகுபடியில் பிரச்னைகள், விலை கிடைக்காதது, மார்க்கெட்டிங் பிரச்னைகள் விவசாயிகளை வாட்டி வதைக்கிறது.

பொதுவாக கோடையில் திராட்சைக்கு நல்ல விலை கிடைக்கும். இந்த ஆண்டு கடந்த 10 நாட்களாகவே கடும் சரிவை சந்தித்துள்ளது. கிலோ 14 ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து, வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

இதற்கு காரணம் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து அதிகளவில் திராட்சை இங்கு விற்பனைக்கு வருவதுதான்.

மகாராஷ்டிரா திராட்சை கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.தேனி மாவட்டத்தில் சாகுபடி செய்யும், திராட்சைக்கு விலை கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## காய்கறி சாகுபடிக்கு மாறிய ஆண்டிபட்டி விவசாயிகள்

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டியில் நெல்,கரும்பு,வாழை விவசாயிகள் வறட்சியால்,காய்கறி உற்பத்தியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் வெள்ளையத்தேவன்பட்டி, அணைக்கரைப்பட்டி, தர்மத்துப்பட்டி, புதூர், புள்ளிமான்கோம்பை உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் இறவை பாசனம் செய்து வருகின்றனர்.

வைகை ஆற்றின் கரைப்பகுதியில் உள்ள இக்கிராமங்களில் ஆண்டு முழுவதும் விவசாயம் நடைபெறும்.

நெல், கரும்பு, வாழை சாகுபடி அதிக அளவில் இருக்கும். இந்த ஆண்டு மழை பொய்த்துப்போனதால் கடும் வறட்சி ஏற்பட்டது.

கிணறுகளில் போதுமான அளவு நீர் சுரப்பு இல்லாததால் நெல், கரும்பு, வாழை சாகுபடியை குறைத்துக்கொண்டனர். இருக்கும் தண்ணீரைக்கொண்டு தற்போது கத்தரி, வெண்டை, முட்டைகோஸ், பாகற்காய், அவரை போன்ற காய்கறிகளை சாகுபடி செய்துள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில்,""வறட்சியால் ஆற்றில் நீர் வரத்து இல்லை. கிணறுகள், ஆழ்குழாய்களில் போதுமான அளவு நீர் சுரப்பு இல்லை.

குறைந்த அளவுநீரைக்கொண்டு நெல், வாழை, கரும்பு சாகுபடி செய்ய முடியாததால், காய்கறி சாகுபடி செய்து வருகிறோம்,"என்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

2.04.2013 A.M

---

## வேலை உறுதி திட்டம் விவசாயத்திற்கும் விரிவாக்கம் பாராளுமன்றத்தில் வலியுறுத்துவதாக ராமசுப்பு எம்பி உறுதி

நெல்லை,: நெல்லை மாவட்ட விழிப்பு, கண்காணிப்புக் குழு கூட்டம் நெல் லை தொகுதி எம்பி ராம சுப்பு தலைமையில் நடந்தது. கூட்டத்தில் அவர் பேசியதாவது: மத்திய அரசு மாநில அரசுகளின் வளர்ச்சிப் பணிகளுக்கு அதிக நிதி வழங்கி வருகிறது. மத்திய அரசின் திட்டங்களை ஆய்வு செய்ய 15 நாட்களில் குழு வருகை தர உள்ளது.

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் வேலை உறுதி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலை உறுதி திட்டத்தில் விவசாய பணிகளையும் சேர்க்க வேண்டும்.

விவசாயத்திற்கும் இந்த பயன்கள் கிடைக்கும் வகை யில் வேலை உறுதி திட்ட ஊதியம் ரூ.148, விவசாயிகளின் நிலத்தில் பணியாற்றும் போது விவசாயி அளிக்கும் ஊதியம் ரூ.50ம் சேர்த்து வழங்கும் போது தொழிலாளர்கள், விவசாயிகள் என இருவரும் பயன் பெறுவர். இது தொடர்பாக ஏற்கெனவே மத்திய அர சிடம் வலியுறுத்தியுள்ளேன்.

விவசாயிகளும் பயன் பெறும் வகையில் கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் வேலை உறுதி திட் டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலும் வேலை உறுதி திட்ட பயன் களை விவசாயத்திற்கும் விரிவாக்கம் செய்ய பாராளுமன்றத்தில் வலியுறுத்து வேன். அப்போது ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களை விவ சாய பணி களில் ஈடுபடுத்த முடியும். இதன் மூலம் கூலியாட்கள் தட்டுப்பாடு நீங்கும். இவ்வாறு அவர் பேசினார்.

கலெக்டர் சமயமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அமானுல்லா, மகளிர் திட்ட அலுவலர் விஜயகுமார், மாநகராட்சி கமிஷனர் சீனி அஜ்மல்கான், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மோகன், வேளாண்மை இணை இயக்குநர் சௌந்தர்ராஜன், செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் மதி மாறன், விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர் கள் சுத்தமல்லி முருகேசன், இந்திரா சுப்பிரமணியன், தமிழ்செல்வன், இந்திய உணவுக் கழக ஆலோசனைக்குழு உறுப்பினர் வைகுண்டராஜா, அமீர்கான், யூனியன் தலைவர்கள், பிடிஒக்கள் உட்பட பலர் கலந்து

கொண்டனர்.

எம்எல்ஏக்கள் ஆப்சென்ட்

விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் என்பது மத்திய அரசு திட்டங்களை ஆய்வு செய்வது தான் என்ற போதிலும் எம்எல்ஏக்களும் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம். பல்வேறு திட்டங்களுக்கு நிதி கேட்டு வலியுறுத்தலாம். ஆனால் இந்த கூட்டத்தின் தலைவர் என்ற முறையில் ராமசுப்பு எம்பி மட்டுமே கூட்டத்தில் பங்கேற்றார். கூட்டத்தின் இணை தலைவரான தென்காசி எம்பி லிங்கம், தங்கவேலு எம்பி, உறுப்பினரான மாவட்ட பஞ். தலைவர் நாராயணப்பெருமாள், எம்எல்ஏக்கள் உள்ளிட்ட யாருமே கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இந்த கூட்டத்திற்கு கட்சி முக்கியம் இல்லை. எம்எல்ஏக்கள் கோரிக்கை வைத்தால் மத்திய அரசிடம் தெரிவிப்பேன். எம்எல்ஏக்களும் இந்த கூட்டத்தில் பங்கேற்றிருக்கலாம் என தனது ஆதங்கத்தையும் ராமசுப்பு எம்பி கூட்டத்தின் இறுதியில் வெளிப்படுத்தினார்.

## சங்கரன்கோவில் அருகே விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

சங்கரன்கோவில்,: சங்கரன்கோவில் அருகே மூவிருந்தாளி கிராமத்தில் ஐசோபாம் எண்ணெய் பனை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சௌந்திரராஜன் தலைமை வகித்தார்.

மேலநீலிதநல்லூர் யூனியன் தலைவர் முருகையா முன்னிலை வகித்தார். வட்டார உதவி இயக்குனர் செந்தில்வேல்முருகன் வரவேற்றார். மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் தர்மராஜ், பஞ்சாயத்து தலைவர் சித்திரை ஜோதிப்பாண்டியன், வேளாண்மை அலுவலர் அறிவழகன் பேசினர். கோத்ரேஜ் அக்ரோவெட் நிறுவனத்தின் வெங்கடேஷ், பாலமுருகன் ஆகியோர் எண்ணெய் பனை தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்தனர்.

மூவிருந்தாளி மற்றும் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி அலுவலர் சிவா நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சிவா, சீனிவாசன், பணியாளர்கள் செய்திருந்தனர்

## விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு பயிற்சி

நாமக்கல்,: பெஸ்ட் தொண்டு நிறுவனம் சார்பில் தர்மபுரியை சேர்ந்த விவசாயிகளுக்கு நாமக்கல்லில் ஆடு வளர்ப்பு குறித்து 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணராஜ், முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், உதவிபொது மேலாளர் பூவராகவன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். பெஸ்ட் நிறுவன

தொழில்நுட்ப ஆலோசகர் துரை, ஓய்வுபெற்ற வேளாண்மை இணை இயக்குனர்கள், கால்நடை இணை இயக்குனர்கள் இதில் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.

விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு கண்காட்சியும், செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. உயர் இன ஆடு வளர்க்கும் அபி ஆட்டு பண்ணைக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு செம்மறி ஆடு வளர்ப்பு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை இயந்திரங்கள் செயல்படும் விதம், தீவனம் புல் வளர்க்கும் விபரங்கள் இந்த பயிற்சியின் போது விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

## பழம், காய்கறியை விட காளானில் புரதச்சத்து அதிகம் வேளாண் அதிகாரி தகவல்

நாகை, : பழம், காய்கறியை விட காளானில் அதிக புரதச்சத்து உள்ளது என்று வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

நாகையில் உணவு காளான் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. முகாமை துவக்கி வைத்து வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் வெங்கடாசலம் பேசியதாவது: நாளுக்குநாள் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புரதச்சத்து மிகுந்த உணவு தேவையை நிவர்த்தி செய்வதில் காளான் பெரும்பங்கு வகிக்கிறது. உலர்ந்த காளானில் 20 முதல் 30 சதம் அளவிற்கு புரதச்சத்து உள்ளது. இது காய்கறி, பழங்களில் உள்ள புரதச்சத்தைவிட அதிகமாகும். மேலும் இதில் லைசின், ட்ரிப்டோபேன் போன்ற அமினோ அமிலங்களும், பி மற்றும் சி வைட்டமின்களும் அதிகளவில் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் மொட்டு காளான், சிப்பிக்காளான் வகைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

காளான் வளர்ப்பு, கிராம மக்களின் குறிப்பாக பண்ணை மகளிர், மகளிர் சுய உதவிக்குழு போன்றோரின் நேரத்தை பயனுள்ளதாக மாற்றி நல்ல வருமானத்தை ஈட்டி கொடுத்து மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த உதவுகிறது. மேலும் காளான் கழிவு, மண்புழு உரம், தயாரிக்கவும், காளானிலிருந்து மதிப்பு கூட்டுப்பொருளாக காளான் ஊறுகாய், சூப்பு பொடி, வடகம் போன்ற பொருட்களை தயாரித்து வருமானம் ஈட்ட முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

2.04.2013 A.M

## கால்நடை தீவன அபிவிருத்தி திட்டத்தில் 30 பயனாளிகளுக்கு உதவித்தொகை கோபால்சாமி எம்.எல்.ஏ. வழங்கினார்

ராஜபாளையம்

கால்நடை தீவன அபிவிருத்தி திட்டத்தில் 30 பயனாளிகளுக்கு உதவித்தொகையை கோபால்சாமி எம்.எல்.ஏ. வழங்கினார்.

**உதவித்தொகை**

ராஜபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மீனாட்சியாபுரம் பஞ்சாயத்து அலுவலகத்தில் கால் நடை தீவன அபிவிருத்தி திட்டத்தில் பயனாளிகளுக்கு உதவிதொகை வழங்கும்விழா நடந்தது. விழாவுக்கு ஊரக கால்நடை உதவி மருத்துவர் பிரபாகரன் தலைமை தாங்கி னார். மீனாட்சிபுரம் பஞ்சாயத்து தலைவர் கதிரேசன் முன்னிலை வகித்தார். இதில் கோபால்சாமி எம்.எல்.ஏ. கால்நடை தீவின அபிவிருத்தி திட்டத்தில் 30 பயனாளிகளுக்கு ரூ.55 ஆயிரத்து 200 வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

மீனாட்சிபுரம் பகுதிக்கு கால்நடை 2மருத்துவம் வேண்டும் என்ற பொது மக்களின் கோரிக்கையை முதல்அமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றேன். அதன் பயனாக மீனாட்சிபுரம் பகுதிக்கு உடனடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க முதல்அமைச்சர் உத்தரவிட்டார். இதன்மூலம் இங்கு கால்நடை மருத்துவ மனை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மக்களுக்கான அரசு**

கால்நடை தீவின அபிவிருத்தி திட்டத்தில் கால் நடை வளர்ப்பவர்கள் சிரமத்தை போக்குவதற்கு உதவித் தொகையை வழங்கும் திட்டத்தை அ.தி.மு.க. அரசு செயல் படுத்தி வருகிறது. இதேபோல் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து மக்களுக்கான அரசாக செயல்பட்டு வருகிறது. மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி தரவேண்டும் என முதல்அமைச்சர் உத்தர விட்டுள்ளார்.

கிராமப்பகுதி மக்களுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகள் ராஜ பாளையம் சட்டமன்ற தொகுதியில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

இதில் மீனாட்சிபுரம், அருள்புத்தூர், சித்துராஜா புரம், தெற்கு மீனாட்சியாபுரம், பஞ்சம்பட்டி ஆகிய பகுதியில் கால்நடை வளர்க்கும் மக்கள் பயன்பெற்றனர். விழாவில் மீனாட்சிபுரம் பஞ்சாயத்து துணைத்தலைவர் மனரஞ்சிதம், கிளை செயலாளர் பவுன்ராஜ், பெரிய ஆண்டவர், தவம்பெற்றாள், பொன்னு லட்சுமி, பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் அமைச்சர் வழங்கினார்

இலுப்பூர்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப் பினர்களுக்கு மானிய விலையில் கால்நடை தீவனத்தை வழங்கி, அத் திட்டத்தை அமைச்சர் சுப்பிரமணியன் தொட ங்கி வைத்தார்.

**மானிய விலைமாட்டு தீவனங்கள்**

அன்னவாசல் ஒன்றியத்தை சேர்ந்த காவேரிநகரில், தமிழக முதல்அமைச்சரின் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கும் திட்டத்தை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். அவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் களுக்கு மானிய விலை மாட்டு தீவனங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

தமிழக முதல்அமைச்சர் வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள மாவட்டங்களில் கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டதை கவனத்துடன் பரிசீலனை செய்தார். இதைத்தொடர்ந்து கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்கும் திட்டத்தின் கீழ் காவிரி டெல்டா மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்க ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ரூ.4 லட்சம் ஒதுக்கீடு**

நமது மாவட்டத்தில் ரூ.4 லட்சத்து 8 ஆயிரம் வரை பால் உற்பத்தியாளர்களுக்கு மானியம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் படி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு

சங்கங்களில் கறவை செய்யும் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை ஆகியவற்றை பெற்று பயனடையலாம்.

மேலும், கிராம பால் கூட்டுறவு சங்கங்களில் பால் கறவை செய்யும் உறுப்பினர்கள் தரும் பால் லிட்டர் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் அதிகபட்சம் ஒரு கிலோ வரை, பால் உற்பத்திக்கு தகுந்தவாறு நாள் ஒன்றுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.4 மானியம் வழங்கப்படுகிறது. இதேபோன்று தாது உப்புக் கலவை பால் கறவை செய்யும் உறுப்பினர்களுக்கு நாள் ஒன் றுக்கு 20 கிராம் தாது உப்புக் கலவை 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும்.

**4,101 பேர் பயன்பெறுவார்கள்**

நமது மாவட்டத்தில் 138 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் கறவை செய்யும் 4 ஆயிரத்து 101 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். இத் திட்டத்தின் கீழ் புதுக் கோட்டை மாவட் டத்திற்கு 120 டன் கால்நடை தீவனமும், 2.5 டன் தாது உப்புக்கலவையும் மானிய விலையில் வழங்க நட வடிக்கை கள் மேற் கொள் ளப்பட்டு வருகிறது. இதனை பால் உற்பத்தி செய்யும் அனை வரும் பெற்று பால் உற்பத்தித் திறனை அதிகரித்து, கால்நடை களை ஆரோக்கியமான முறை யில் பராமரிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பேசினார். முன்ன தாக புதுக்கோட்டை ஆவின் பொது மேலாளர் செல்வராஜ் வரவேற்று பேசினார். இந்த விழாவில் ஆர்.டி.ஓ. முத்து மாரி, மாவட்ட ஊராட்சி தலைவர் ராமையா, மாவட்ட ஊராட்சி துணை தலைவர் கனகராஜ், ஊராட்சி ஒன்றியக்குழு துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்தையா, தங் கையா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை பசுந்தீவன சாகுபடிக்கு 100 சதவீத மானியம்

கிருஷ்ணகிரி

கோடையால் கிருஷ்ண கிரி மாவட்டத்தில் கால் நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்படு வதை தடுக்க பசுந் தீவனம் சாகுபடி செய்ய 100 சதவீத மானி யம் வழங்கப்படும் என்று மாவட்ட கலெக் டர் ராஜேஷ் தெரிவித்துள் ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

**பசுந்தீவனம்**

தமிழகத்தில் 2வது வெண்மை புரட்சியை ஏற் படுத்தும் நோக்கத்துடன் தமி ழக முதல்அமைச்சர் விலை யில்லா கறவை பசுக் களை ஏழை, எளிய விவசாயி களுக்கு வழங்கிவருகிறார். கால்நடை களின் உற்பத்தி திறனை அதிகரிக்க பசுந்தீவனம் இன்றியமையாதது ஆகும்.

பசுந்தீவனம் கால்நடை களுக்கு குறைவில்லாமல் கிடைக்கும் நோக்கத்துடன் தமிழக முதல்அமைச்சரால் 20122013ம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 400 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய கோ 3 மற்றும் கோ 4 சோள ரங்கங்களை சாகுபடி செய்ய அறிவிக்கப்பட்டு 100 சதவீதம் மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**100 சதவீத மானியம்**

இந்தநிலையில் வரும் கோடைக்காலத்தில் வறட் சியை சமாளிக்கும் விதமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூடுதலாக 150 ஏக்கர் பரப்பில் 100 சதவீத மானியத்தில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டைப்பயிறு போன்ற ரகங் களை சாகுபடி செய்ய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ¼ ஏக்கரில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டப் பயிறு போன்ற ரகங்களை சாகுபடி செய்ய 100 சதவீத மானியமாக ரூ. 2 ஆயி ரம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற விரும்பும் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பித்து பயன்பெற லாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.